Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
**Case No CC.NO.92/2023, Cr.No.918/2020, Kandili PS**
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.1, Page.No.

| | |
|---|---|
| பெயர் | பார்வதி |
| வயது | 47 |
| தந்தை/கணவர் பெயர் | செல்வராஜ் |
| கிராமம் | செவ்வாத்தூர் |
| மாவட்டம் | திருப்பத்தூர் |
| தொழில் | கூலி |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 31th day of October 2025.

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>முதல் விசாரணை</u> (எதிரி ஆஜர்)**

**நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 24.10.2020 அன்று இரவு 08.00 மணியளவில் என்னுடைய கணவர் வேலை முடித்துவிட்டு தருமபுரி–திருப்பத்தூர் சாலையில் செவ்வாத்தூர் நோக்கி வந்து கொண்டிருந்தபோது, இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாகவும், ஆம்புலன்ஸ் மூலம் திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அருகில் கடை வைத்திருந்த சரவணன் எனக்கு தகவல் கூறினார். பின்னர் நான் மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது, மருத்துவர்கள் 08.30 மணியளவில் எனது கணவர் இறந்து விட்டார் என்று கூறினார்கள். மேற்படி அவரை நான் பார்த்தபோது, தலை, முகம், கை மற்றும் கால்களில் காயம் ஏற்பட்டிருந்தது. பின்னர் இது குறித்து நான் கந்திலி காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் மறுநாள் பிரேத பரிசோதனை முடித்து என் கணவரின் உடலை என்னிடம் ஒப்படைத்தார்கள், போலீசார் என்னை விசாரித்தனர்.**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

நான் சம்பவத்தை கேள்விபப்ட்டு மருத்துவமனைக்கு சென்று தான் பார்த்தேன் என்றால் சரிதான். எனது கணவரின் உடல் சவக்கிடங்கில் இருந்ததால் என்னை பார்ப்பதற்கு அனுமதிக்கவில்லை என்றால் சரியல்ல, நான் பார்த்தேன். எனது கணவர் சம்பவத்தன்று கண்ணாளப்பட்டிக்கு வேலைக்கு சென்றிருந்தார். அவர் கூலி வேலை செயவ்வதால் யார் வேலைக்கு அழைத்தாலும் செல்வார். அவர் வேலை நேரம் 09.00 - 06.00 வரை ஆகும். கண்ணாளப்பட்டியிலிருந்து என்னுடைய ஊருக்கு 2 கி.மீ. அவர் வாகனத்தில் செல்வார் என்றால் சரியல்ல, மிதிவண்டியிலும், நடந்தும் செல்வார். சம்பவத்தன்று மழை பெய்தது என்றால் சரிதான். சம்பவம் நடந்தது இருட்டான நேரம் என்றால் சரிதான். செவ்வாத்தூர் கூட்ரோட்டிற்கு அருகில் அரசு மதுபானக் கடை உள்ளதால் திருப்பத்தூர்-தருமபுரி சாலையில் போக்குவரத்து மிகுதி என்றால் சரிதான். நான் மருத்துவமனியல் புகார் அளித்தேன் என்றால் சரியல்ல, காவல் நிலையத்தில் தான் புகார் அளித்தேன். புகாரை காவல் துறையினர் எழுதினர். புகாரில் நான் கையொப்பம் மட்டும் தான் செயதேன் என்றால் சரியல்ல, நான் சம்பவம் குறித்து கூறியதை எழுதிய பின்னர் கையொப்பம் செய்தேன். என்னுடைய கணவருக்கு நஷ்ட ஈடு கிடைப்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் மேற்படி சொன்ன நேரத்திலும் விதத்திலும் சமபவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை :- இல்லை</u>**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

Judicial Magistrate No.II,
Tirupathur.

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
**Case No CC.NO.92/2023, Cr.No.918/2020, Kandili PS**
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.2, Page.No.

| | |
|---|---|
| பெயர் | சங்கர் |
| வயது | 45 |
| தந்தை/கணவர் பெயர் | பெரியசாமி |
| கிராமம் | செவ்வாத்தூர் |
| மாவட்டம் | திருப்பத்தூர் |
| தொழில் | இரயில்வே ஊழியர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 31th day of October 2025.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u> (எதிரி ஆஜர்)

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் இரயில்வே துறையில் Senior Technician ஆக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.10.2020 அன்று இரவு 08.00 மணியளவில் தருமபுரி–திருப்பத்தூர் செல்லும் சாலையில் செவ்வாத்தூர் கூட்ரோடு அருகே சாலையின் ஓரமாக நின்றிருந்த போது நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரி தான் 5554 என்ற பதிவெண் கொண்ட சிவப்பு நிற Honda Activa என்ற வாகனத்தை அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து செல்வராஜ் என்பவர் மீது மோதியதில் அவர் கீழே விழுந்து விட்டார். பின்னர் அங்கிருந்த நாங்கள் ஓடிச் சென்று அவரைத் தூக்கினோம். அவருக்கு வலது கால் மற்றும் இடது கை மற்றும் பின் தலையிலும் நிறைய அடிகள் பட்டிருந்தது. பின்னர் அவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் அவரை அழைத்துச் சென்று திருப்பத்தூர் அரசு மருததுவமனையில் சிகிச்சையில் சேர்த்தேன். சிகிச்சைக்கு அழைத்துச் சென்ற போது உடனிருந்தேன். அவர் 08.30 மணியளவில் இறந்து விட்டார். பின்னர் கந்திலி காவல் நிலையத்தில் விபத்து சம்பந்தமாக அ.சா.1 பார்வதி புகார் அளித்தார். பின்னர் காவல் துறையினர் சம்பவயிடத்தை பார்வையிட்டு

அங்கிருந்தவர்களை விசாரித்து கையொப்பம் வாங்கினர். பின்னர் மறுநாள் அவரது உடலை பிரேத பரிசோதனை செய்து பார்வதியிடம் ஒப்படைத்தபோது நானும் இருந்தேன். இந்நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரி தான் விபத்து ஏற்படுத்திய நபர் என்று சாட்சி அடையாளம் காட்டினார். காவல் துறையினர் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

நான் இரயில்வே துறையில் சாமல்பட்டி Head Quarters-ல் வேலை செய்கிறேன். என்னுடைய பணி திருப்பத்தூரிலிருந்து மொரப்பூர் வரையில் மின்சாரம் சம்பந்தமான பணிகளை செய்வதாகும். என்னடைய வழக்கமான பணி நேரம் 08.00 – 05.00 ஆகும். நான் சம்பவயிடத்திற்கு கறி வாங்குவதற்காக 07.50 மணியளவில் சென்றிருந்தேன். அந்த இடத்தில் 6 கறி கடைகள் இருந்தது. செவ்வாத்தூர் கூட்ரோடு தருமபுரி-திருப்பத்தூர் நெடுஞ்சாலை என்பதாலும் அங்கு மதுக்கடை உள்ளது என்பதாலும் அது போக்குவரத்து நெரிசல் அதிகம் உள்ள பகுதி என்றால் சரிதான். நான் கறி வாங்கும்போது கடைக்கு வெளியே சுமார் 10 பேர் நின்றிருந்தனர். சம்பவத்திற்கு பின்னர் அங்கு சுமார் 15 நபர்கள் கூடினர். நான் அ.சா.1 பார்வதிக்கு போன் மூலம் தகவல் தெரிவித்துவிடடு காயம்பட்ட எனது மாமாவை 108 ஆம்புலன்ஸ் மூலம் அழைத்து சென்ற போது நானும் உடன் சென்றேன். எங்களுடன் வேறு யாரும் ஆம்புலன்ஸில் வரவில்லை. விபத்து ஏற்பட்டபோது மழை பெய்தது என்றால் தூரல் தான் இருந்தது. இரவு 08.00 என்பதால் சம்பவயிடம் இருட்டாக இருந்தது என்றால் ரொம்ப இருட்டாக இல்லை, கடையின் வெளிச்சமும், இருபுறமும் பேருந்து செல்வதால் வெளிச்சமாக இருந்தது. நான் சொல்வது போல் அங்க கறிக்கடை இல்லை என்றால் சரியல்ல. எனது மாமா எங்கு வேலைக்கு சென்றார் என்றால் எனக்கு தெரியாது, ஆனால் சம்பவத்தின்போது கூட்ரோட்டில் இருந்து இடது புறமாக திருப்பத்தூரை நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தார். கூட்ரோட்டில் இருந்து 10-20 அடி தொலைவில் விபத்து ஏற்பட்டது. நான் நின்றிருந்த கடைக்கும் விபத்து நடந்த பகுதிக்கும் சுமார் 20 அடி இருக்கும். இரவு நேரத்தில் வாகனங்கள் வருவது எவ்வளவு தூரத்தில் இருந்து பார்த்தால் தெரியும் என்றால் அங்கு இருட்டாக இல்லை. சாதாரணமாக 15 – 20 அடி வரை எனக்கு நன்றாக தெரியும். விபத்து நடந்தபோது வாகனங்கள் சென்று கொண்டு தான் இருந்தன. விபத்து நடந்த போது எத்தனை வாகனங்கள் சென்றிருக்கும் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால்

அனைத்து வாகனங்களையும் பார்க்க முடியாததால் கூற முடியாது. பொதுவாக இரவு நேரத்தில் வாகனத்தின் வெளிச்சத்தில் எதிரெதிரே செல்லும் வாகனங்களை பார்ப்பது கடினம் என்றால் சரியல்ல. நான் சொன்ன விதத்திலும் சொன்ன நேரத்திலும் சம்பவம் நடந்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. கந்திலி காவல் நிலையத்தில் புகார் அளித்தபோது அ.சா.1, நான் மற்றும் எங்கள் தம்பி ஆகியோர் சென்றோம். என்னுடைய மாமா மேஸ்திரி என்பதால் பொதுவாக அவருடைய பணி 07.00 – 02.00 அல்லது 09.00–05.00 மணியளவில் இருக்கும் என்றால் சரிதான். அவர் செவ்வாத்தூரிலிருந்து வந்தாரா என்று என்னால் கூறமுடியாது என்றால் சரிதான். விபத்ததில் இறந்தவர் என்னுடைய மாமா என்பதால் சம்பவத்தின்போது நான் அங்கு இல்லை என்றாலும் என்னுடைய அக்கா நஷ்ட ஈடு பெறுவதற்காகவும், விபத்தை பார்த்தது போல் பொய் சாட்சியம் அளிக்கிறனே் என்றாலும் எதிரிக்கும் இந்த விபத்திற்கும் சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை :– இல்லை**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

JUDICIAL MAGISTRATE NO.II

KOVENDHAN S

Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

Judicial Magistrate No.II,
Tirupathur.